பொது நிருவாக அமைச்சு,
சுதந்திர சதுக்கம்.
கொழும்பு 7. 20.5.85

பொது நிருவாக சுற்று நிருபம் இல 290.

அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்.
திணைக்களத் தலைவர்களுக்கும்.
பொதுக் கூட்டுத்தாபனங்களினதும் அரச உதவிபெறும் நிறுவனங்களினதும் தலைவர்களுக்கும்.

## அரசாங்க கூட்டுத்தாபனத் துறைத் தொழிலமர்வுத் தொகைமதிப்பு – 1985.

தொகைமதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம் அரசாங்கக் கூட்டுத்தாபனத் துறைத் தொழிலமர்வுத் தொகைமதிப்பு – 1985. ஒன்றை நடாத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ளது. இது அரசாங்க கூட்டுத்தாபனத் துறைத் தொழிலமர்வுத் தொகைமதிப்பின் 5வது தொடராகும். இதுபோன்ற தொகை மதிப்புகள் 1968ம், 1972ம், 1976ம் ஆண்டுகளில் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தின் உதவியோடு பொது நிருவாக அமைச்சராலும் 4வது தொகைமதிப்பு 1980ம் ஆண்டில் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தாலும் நடாத்தப்பட்டன.

2. அரசாங்க கூட்டுத்தாபனத் துறைத் தொழிலமர்வுத் தொகைமதிப்பு– 1985, யூலை மாதம் 2ந் திகதி நடாத்துவதாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. இத்தொகை மதிப்பு அரசாங்க அமைச்சுகளினதும், திணைக்களங்களினதும் பொதுக் கூட்டுத்தாபனங்களினதும் அரச உதவிபெறும் நிறுவனங்களினதும் சகல நிரந்தர தற்காலிக அமைய ஊழியர்களையும் அடக்கியதாயிருக்கும். தேவையான தரவுகள் கணக்கெடுப்புப் படிவத்தை நிரப்பும் ஊழியர்களாலேயே கொடுக்கப்படும்.

03. கணக்கெடுப்புப் படிவங்கள் உங்களுக்குத் தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்படும். இப்படிவங்களை நிறுவனத்தின் சகல ஊழியர்களுக்கும் பகிர்ந்தளித்து, நிரப்பிய படிவங்களை ஊழியர்களிடமிருந்து மீண்டுமெடுத்து பூரணமாகவும் செம்மையாகவும் நிரப்பியிருக்கின்றதாவெனச் செவ்வை பார்த்து குறைந் தாமதத்தோடு தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு அனுப்பி வைப்பதாக நீங்கள் பார்த்துக் கொள்வது அவசியமாகும்.

04. அரசாங்கத் துறைத் தொழிலமர்வைப் பற்றிய நடைமுறையிலுள்ள தரவுகளையும் விபரங்களையும் பெறுவதற்கு அத்தியாவசியமான இந்த அளவீட்டின் முக்கியத்துவத்தை நான் மேலும் உறுத்திக் கூறவேண்டிய தேவையில்லை. (3) ஆ பந்தியில் விபரித்துள்ள நடவடிக்கைகள் வெற்றிகரமாகச் செயற்படுவதாகப் பார்த்துக் கொள்வதற்குத் தேவையான ஒழுங்குகளைச் செய்யுமாறு நான் உங்களை வினயமாக வேண்டிக் கொள்கிறேன். இத்தொகை மதிப்பைத் திறம்பட நடாத்துவதற்கு உங்களது ஒத்துழைப்பை நாடுகிறேன்.

ஒப்பம்: டி.பீ.ஐ.பி.எஸ். சிறிவர்த்தன
செயலாளர்.
பொது நிருவாக அமைச்சு.

பிரதி: அதிபர்.
தொகை மதிப்புப் புள்ளிவிபரத் திணைக்களம்.
செயலாளர்.
திட்ட அமுலாக்க அமைச்சு.